## சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2014

---

சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சுங்கத்திற்கு உரித்தற்ற இடமொன்றில் விநியோகித்தல் இழப்பீட்டுப் பதிவேடொன்றைப் பாதுகாப்பதற்காக மேவுகையொன்றை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2,526,551 தொகை செலவிடப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இற்கு முரணாக மேற்கூறப்பட்ட பணம் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இதனைச் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உரிய சொத்துக்களிற்கான திரண்ட பெறுமானத் தேய்வின் பெறுமதி ரூபா 505,310 ஆகஇருந்தது.

(ஆ) 3 வெகுமதிக் கோவைகளுக்குரிய ரூபா 54,500 கூட்டுத்தொகையுடைய வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 நிலையான சொத்து விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதி ரூபா 9,859,948 ஆக இருந்த போதிலும், நிலையான சொத்துப் பதிவேட்டின்படி அப் பெறுமதி ரூபா 11,234,859 ஆக இருந்தமையால் ரூபா 1,374,911 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதியத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்குரிய திறைசேரி அச்சிடல் குறிப்புக்களுக்கு திணைக்களத்தின் புத்தகங்களுக்குமிடையே முறையே ரூபா 399,717 மற்றும் ரூபா 1,142,665 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைஅவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 153(அ)(i) ஆம் பிரிவு | நிதியத்தின் பணத்தை செலவிடக் கூடிய நோக்கங்களுக்கு முரணாக 5 சந்தர்ப்பங்களில் ரூபா 10,451,641 தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு | |

| | |
|---|---|
| நிதிப்பிரமாணக் கோவையினது நிதிப்பிரமாணம் 756 | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 சனவரி 13 ஆந் திகதிய DMA/07 ஆம் இலக்க மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | முறையான பிரகாரம் கணனி மற்றும் மென்பொருள் தொடர்பான விரிவான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி மற்றும் 2006 யூலை 30 ஆந் திகதிய 422 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கை | நிதியாண்டின் போது பொருட்களின் கொள்வனவு மற்றும் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டு அந்த அறிக்கை நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை சுங்கத்தின் மூலதன மற்றம் மீண்டெழும் செலவினங்களுக்காக திறைசேரி நிதியேற்பாடு போதியளவாக இல்லாமையின் காரணமாக ரூபா 24,071,854 கூட்டுத்தொகையொன்று சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழபப்பீட்டு நிதியத்திலிருந்து செய்யப்பட்டிருந்தது. மேலும் அந்த தொகையில் ரூபா 10,775,608 தொகையினைச் செலவிடுவதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 393,796,271 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 478,770,293 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 84,974,022 வீழ்ச்சி காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதியத்தின் வருமானம் ரூபா 76,663,765 இனால் அல்லது 12 சதவீதத்தினால் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 செலவினங்களில் அசாதாரன அதிகரிப்பு / குறைவு

முன்னைய ஆண்டில் ரூபா 24,633,534 தொகையான ஏனைய செலவினங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 49,646,587 வரை 102 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் ரூபா 26,106,538 தொகையான பட்டபின்படிப்பு பாடநெறிச் செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 2,783,800 வரை 89 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிதியத்தின் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிவிளைவுகள் தொடர்பான பகுப்பாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் /செலவின வகை | 2014 இல் கிடைத்த வருமானம் /ஏற்பட்ட செலவினம் | 2014 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் /மொத்த செலவினத்தின் சதவீதமாக | 2013 இல் கிடைத்த வருமானம் /ஏற்பட்ட செலவினம் | 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆம் ஆண்டின் அதிகரிப்பு/ குறைவு | |
|---|---|---|---|---|---|
| | | | | பெறுமதி | சதவீதமாக |
| | ரூபா' 000 | | ரூபா' 000 | ரூபா' 000 | |
| **வருமானம்** | | | | | |
| கைப்பற்றப்பட்ட பொருள் விற்பனை | 89,824 | 17.4 | 109,869 | (20,045) | (18.24) |
| தண்டப்பணம் | 426,399 | 82.6 | 479,999 | (53,600) | (11.17) |
| ஏனைய பெறுவனவு | 0 | 0 | 3,019 | (3,019) | (100) |
| மொத்த வருமானம் | 516,223 | 100 | 592,887 | (76,664) | (12.93) |
| **செலவினம்** | | | | | |
| உள்நாட்டுப் பயிற்சி | 15,911 | 13 | 12,063 | 3,848 | 31.89 |
| வெளிநாட்டுப் பயிற்சி | 54,086 | 44.18 | 51,314 | 2,772 | 5.4 |
| பட்டபின் படிப்பு கற்கைநெறி | 2,784 | 2.27 | 26,107 | (23,323) | (89.34) |
| ஏனைய செலவினம் | 49,646 | 40.55 | 24,633 | 25,013 | 101.54 |
| மொத்த செலவினம் | 122,427 | 100 | 114,117 | 8,310 | 7.28 |
| மிகை | 393,796 | | 478,770 | (84,974) | (17.75) |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுங்கப் பரிசோதனைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தவறுகளுக்காக விதிக்கப்பட்ட தண்டப் பணம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானத்தில் 50 சதவீதம் வெகுமதிக்கென ஒதுக்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் 50 சதவீத தொகையில் 40 சதவீதம் சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தில் செலவு வைக்கப்படும். நிதியத்தின் வருமானத்திற்காக மீளாய்வாண்டின் போது தண்டப் பணம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து முறையே 82.6 சதவீதம் மற்றும் 17.4 சதவீதம் பங்களிப்பு கிடைத்திருந்தது.

(ஆ) சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ ஆற்றலை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல், விபத்துகளுக்கு உட்படும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு செலுத்துதல என்பன இந்த நிதியத்தின் பிரதான நோக்கங்களாக இருந்தன. அந்த நோக்கங்களை அமுல்படுத்துவதற்காக குறிப்பான அளவு கோலொன்று இனங்காணப்படாமல் நிதியத்திற்கு நிதி ஒதுக்கப்படாமையினால் நிதியத்தின் திரண்ட மீதி வருடாந்தம் அதிகரித்துக் காணப்பட்டது. அதன்படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,889 மில்லியன் தொகையான திரண்ட மீதி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,283 மில்லியன் வரை ரூபா 394 மில்லியனால் அதாவது 10.13 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

வெளிநாட்டுக் கற்கை மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக முறையான பிரகாரம் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படாமல் இலங்கை சுங்கத்தில் தகுதிகாண் காலத்தில் இருந்த இரண்டு உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு கற்கை மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் ஒரு உத்தியோகத்தர் 08 சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சி திட்டத்திற்காக அனுப்பப்பட்டிருந்தார்.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக எழுந்த இரண்டு வழக்கு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,272,300 தொகை அதற்கான முற்பணக்கணக்கிலிருந்து செலவிடப்படுவதற்குப் பதிலாக சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்தவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் பாதிடப்பட்ட வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 28 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின்படி பாதீட்டைத் தயாரித்து கணக்காண்டு ஆரம்பமாவதற்கு 3½ மாதங்களுக்கு முன் உரிய அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் பாதீடு கணக்காண்டு ஆரம்பித்து 06 மாதங்களுக்குப் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) நிதியப் பயன்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு
(உ) நிதிக்கட்டுப்பாடு